பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 10 திங்கட்கிழமை 26.07.2021 கதிர் 129

## நீரில் மூழ்கி இருவர் சாவு

குருநாகல் மாவட்டம், கொபெய்கனே, எம்பலயாகம பிரதேசத்தில் தெதுருஓயாவில் நீராடச் சென்ற இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் என்று கொபெய்கனே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 18, 24 வயதுடைய இருவரே

2

# பிக்குகள் புடைசூழ கைதடி வந்த பந்துலசேன வடக்கின் பிரதம செயலாளராகப் பதவியேற்பு





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்தின் புதிய பிரதம செயலாளராக சமன் பந்துல சேன இன்று பதவியேற்றார்.

வவுனியாவிலிருந்து பௌத்த பிக்குகள் புடைசூழ கைதடி வந்த அவர், சுபநேரமான முற்பகல் 11.45 மணியளவில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளராகக் கடமையாற்றிய அ.பத்தி நாதன் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது

2

# யாழ். மாவட்ட அரச அதிபராகவும் சிங்களவரை நியமிக்கத் திட்டம்

## நிறுத்துமாறு கோரி மஹிந்தவுக்கு சம்பந்தன் கடிதம்

**தமிழ் பேச தெரியாத ஒரு அரச உத்தியோகத்தரை மாவட்ட அரச அதிபராக யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும்.மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

**யாழ். மாவட்டத்துக்குத் தமிழ் பேச முடியாத ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட இருக்கின்றார் என்ற தகவல் வெளியாகியுள்ள நிலையில், அந்த நியமனத்தை நிறுத்துமாறு கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.**



2

## கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 151 பேர் சிக்கினார்கள்

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் தனி மைப் படுத்தல்சட்டவிதிமுறைகளை மீறிய மேலும்151பேர்நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற் றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண் ணிக்கை 52

2

## வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயம்

**(இ.கலையமுதன்)**

யாழ்., சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சுன்னாகம், கந்தரோடைப் பகுதியைச்சேர்ந்தநிரோஷன் (வயது 25) என்பவரே படுகாயமடைந்தநிலையில்தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் வீதியால் சென்று கொண்டிருந்த போது 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர்

2

# மக்களுடன் கடமையாற்றும்போது மொழி ஒரு பிரச்சினையே இல்லை

## கடமையேற்ற கையுடன் பந்துலசேன தெரிவிப்பு



**(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)**

மக்களுடன் கடமையாற்றும்போது மொழி ஒரு பிரச்சினையான விடயமல்ல என்று புதிதாகப் பொறுப்பேற்ற வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன தெரிவித்தார்.

இன்று வடக்கு மாகாண பிரதம செயலாளராக உத்தியோக பூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்

2

## வவுனியா மாவட்ட பதில் அரச அதிபராக திரேஸ்குமார் நியமனம்

(ந.லோகதயாளன்)

வவுனியா மாவட்ட பதில் அரச அதிபராக உள்நாட்டு அமைச்சால் தி.திரேஸ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட அரச அதிபராக இருந்த எஸ்.எம்.சமன் பந்துலசேன வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், பதில் அரச அதிபராக வவுனியா

2

## வல்வெட்டித்துறையில் மேலும் 16 பேருக்கு கொரோனா உறுதி

வல்வெட்டித்துறை - ஆதிகோயிலடிப் பகுதி தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு இன்று முன்னெடுக்கப்பட்ட எழுமாறான அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 16 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் 166 பேருக்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே 16 பேருக்குக் கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு (ஜே/388) கிராம அலுவலகர் பிரிவே கொரோனாப் பரவலால் முடக்கப்பட்டுள்ளது. அந்தக் கிராமத்தில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேர் வசிக்கின்றனர்.

## தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினுள் கொரோனா

### இதுவரை 09 உத்தியோகத்தர்கள் அடையாளம்

தெல்லிப்பழைப் பிரேதச செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளின் அடிப்படையில் இன்று 8 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர்

2

## மேலும் ஆறு கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பு

மேலும் சில கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

2

## யாழ். மாவட்ட அரச அதிபராகவும் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்துக்கு விரைவில் தமிழ் பேச முடியாத ஒருவர் அரச அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட இருக்கின்றார் என நான் அறிந்துகொண்டேன்.

நீங்கள் அறிந்திருக்கின்ற பிரகாரம், யாழ்.மாவட்டத்தில் 95 வீதமானவர்கள் தமிழ் பேசும் சமூகத்தினராவர். மேலும், 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களும் தமிழ் பேசும் சமூகத்தைச் சார்ந்தவர்களாவர்.

இந்தப் பின்னணியில் தமிழ் பேச தெரியாத ஒரு அரச உத்தியோகத்தரை மாவட்ட செயலாளராக/அரச அதிபராக யாழ். மாவட்டத்துக்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும். மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும்.

மாவட்டத்திலுள்ள உயர் பதவியில் இருக்கும் அரச உத்தியோகத்தர் தமிழ் பேசும் ஒருவராக இருக்கும் சந்தர்ப்பத்தில் தான் அவருடனான வாய்மூல மற்றும் எழுத்துமூல தொடர்பாடல்கள் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான பூர்வீக இடங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய அரசமைப்பின் ஊடாக அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்க அரசு முயற்சிகளை எடுக்கும் சந்தர்ப்பத்தில் இத்தகைய செயற்பாடுகள் எதிர்மறையான விளைவையும், மக்களால் வரவேற்கப்பட முடியாத ஒன்றாகவுமே காணப்படுகின்றது.

எனவே, அத்தகைய பிரேரணையை மீளாய்வு செய்து, மேற்குறித்த விடயங்களைக் கருத்தில்கொண்டு யாழ். மாவட்டத்தின் மாவட்ட செயலாளராக/அரச அதிபராக அனுபவமும் செயற்திறனுமுள்ள தமிழ் பேசும் ஓர் அரச அதிகாரியை நியமிக்குமாறு நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன் - என்றுள்ளது.

## பதில் அரச அதிபராக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றிய தி.திரேஸ்குமார் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

2003ஆம் ஆண்டு நிர்வாக சேவைக்குத் தேர்வான திரேஸ்குமார், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய வேளை 10.02.2016 அன்று வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார்.

## தெல்லிப்பழை பிரதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவில் கடமையாற்றும் 43 வயதான அச்சுவேலியைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில், அவர் பணியாற்றிய திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்கள் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இன்று காலை முதல் தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனையில் வைத்து அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே இன்று எட்டு உத்தியோகத்தர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் தேவை நிமித்தம் வந்து செல்லுகின்ற குறித்த பிரதேச செயலகத்தில் சில பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சுழற்சி முறையில் பணிக்கு அமர்த்தப்படாமல் தொடர்ச்சியாகப் பணிக்கு வருகை தந்துள்ளமையுடன், முதலாவதாகத் தொற்று இனங்காணப்பட்ட உத்தியோகத்தரும் இறுதியாக வருகை தந்த நாளுக்கு முதல் நாள் கொரோனாத் தொற்று அறிகுறியுடனே (காய்ச்சலுடன்) முக்கியமான வேலை ஒன்றைச் செய்து முடிக்குமாறு பணிக்கப்பட்ட நிலையிலேயே பிரதேச செயலகத்துக்கு வருகை தந்திருந்தார் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏனைய பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கிடைக்கப்பெறும் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மேலும் பலருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்படலாம் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## மக்களுடன் கடமை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

நான் வவுனியாவில் கடந்த ஒன்றரை வருடங்களாக அரச அதிபராகக் கடமையாற்றியிருந்தேன். வவுனியாவைப் பொறுத்தவரை தமிழ், சிங்கள இனத்தைச் சேர்ந்த அனைத்து மதங்களையும் உள்ளடக்கிய மக்கள் வசித்து வருகின்றார்கள். அவ்வாறான பிரதேசத்தில் கடந்த ஒன்றரை வருடங்களாக நான் கடமையாற்றி இருந்தேன்.

எனவே, நான் ஒரு சிங்களவனாக இருந்தாலும் தமிழ் பிரதேசத்தில் கடமையாற்றுவதில் எந்தவித இடையூறும் இருக்காது எனக் கருதுகின்றேன். அதாவது நாங்கள் மக்களோடு கடமையாற்றும்போது மொழி ஒரு பிரச்சினையாக இருக்காது - என்றார்.

## மேலும் ஆறு கிராம .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனடிப்படையில் கேகாலை, இரத்தினபுரி, காலி, முல்லைத்தீவு, மொனராகலை ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 6 கிராம சேவகர் பிரிவுகள் இன்று அதிகாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை கிழக்கு கிராம சேவகர் பிரிவின் நாயாறு மீன்பிடிப் பகுதி தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் மல்விட்ட கிராம சேவகர் பிரிவின் கோலிந்தவத்த இலக்கம் 3ஆம் பிரிவும், இரத்தினபுரி மாவட்டத்தில் பரகல கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவி கப்பட்டுள்ளன.

காலி மாவட்டத்தில் பழைய கொலனி கிராம சேவகர் பிரிவின் திவித்துர தோட்டம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் ஹிந்திகிவ்ல கிழக்கு கிராம சேவகர் பிரிவின் நக்கலவத்த கிராமமும், மில்லகெலவத்த கிராமமும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

## வாள்வெட்டுத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட குழுவொன்று வழிமறித்து வாள்வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

அதில் படுகாயமடைந்த இளைஞரை வீதியால் சென்றவர்கள் மீட்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

## கொரோனாச் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 152 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் 3 ஆயிரத்து 741 வாகனங்களில் வந்த 5 ஆயிரத்து 121 பேர் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் பயணக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிப் பயணித்த 160 பேர் அவர்கள் பயணித்த வாகனங்களில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது பல்வேறு சந்தர்ப்பங்களில் பொதுவிடங்களில் சிலர் முகக்கவசம் அணியாது பயணிப்பது தெரியவந்துள்ளது.

முகக்கவசங்களை தம்வசம் வைத்துக்கொண்டு முகக்கவசத்தை அணியாது சுற்றித்திரிவது தெரியவந்துள்ளது. எனவே, இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இது தொடர்பில் கண்டறிவதற்காக விசேட விசாரணைக் குழுவை நியமிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம். தொடர்ச்சியாக இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார்.

## பிக்குகள் புடைசூழ ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய சமன் பந்துலசேன கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவால் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட நிலையில், அவர் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் அதிகம் வசித்து வரும் நிலையில் தமிழ் பேசும் ஒருவர் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்படாது சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் வடக்கு மாகாணத்துக்குப் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டமைக்கு அரசியல் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில் சமன் பந்துலசேன தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

## நீரில் மூழ்கி .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

குறித்த இருவரும் வார இறுதியில் தமது உறவினர்களின் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில், நீராடச் சென்றபோதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக நிகவரெட்டிய ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொபெய்கனே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**வேலைவாய்ப்பு**
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு -
076 740 3814

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொடரும் வினைக்கு விலை

**எது தேசப்பற்று? தேசப்பற்று என்றால் என்ன?**

**– இப்படி நியாயமான கேள்வி ஒன்றைத் தென்னிலங்கையில் கிளப்பியிருக்கிறார் முன்னாள் நிதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர. இலங்கையில் பேரினவாத கொடூரத்தால் குரூரத்தால் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய கறுப்பு ஜூலைக் கலவர நினைவு நாள்கள் கடந்து செல்வதை ஒட்டி கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.**

**சகல இனங்களையும், சகல மதங்களையும், சகல மக்களையும் ஒன்றிணைத்து தேசத்தை முன்னேற்றப் பாதையில் முன்நகர்த்துவதுதான் உண்மையான தேசப்பற்று.**

**சிறுபான்மையினரைக் கொன்று ஒழிப்பதும், அவர்களது சொத்துக்கள், உடமைகள் போன்றவற்றை சூறையாடுவதும், தேசப்பற்று அல்ல. பௌத்த – சிங்கள பெயரில் தமிழரைக் கொல்வது தேசப்பற்று ஆகாது.**

**சிங்களம் என்று சொல்லி, பௌத்தம் என்று கூறி, கடைகளை எரிப்பதனாலும், வீடுகளை உடைப்பதனாலும், அதிக அளவில் பாதிக்கப்படுவது இறுதியில் சிங்களவர்கள்தான் என்ற உண்மையை அவர் வெளிப்படையாக எடுத்துரைக்கின்றார். உண்மையில் இதில் வேடிக்கை என்னவென்றால், துரதிஷ்டவசமான வேதனை என்னவென்றால், 38 ஆண்டுகளுக்கு முன்னர் இதே விடயத்தில் பட்டறிந்த பின்னரும், பட்டழிந்த பின்னரும், தென்னிலங்கை பௌத்த சிங்கள பேரினவாத வெறி திருந்தாதமைதான்.**

**சிறுபான்மையினரைக் கொன்றொழித்து, அவர்களின் உடமைகளைச் சூறையாடி, கைப்பற்றி, அவர்களின் பூர்வீக தாயகத்திலிருந்து அவர்களை விரட்டியடித்து, இரத்தமும் சதையுமாக நடவடிக்கை எடுத்த இந்தப் பேரினவாத வெறி, இலங்கை பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் காலத்திலிருந்தே – கடந்த முக்கால் நூற்றாண்டாக – தொடர்ந்தே வருகின்றது.**

**2009 மே வரை நேரடிக் கோரமாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் பேரினவாத குரூரம் இப்போது கண்ணுக்குத் தெரியாத அகோரமாகத் தொடர்கின்றது. ஆரம்பத்தில் இரத்தமும், சதையும், பிண்டமுமாக தீயிடல், சூறையாடல், கண்டதுண்டமாக வெட்டிச்சாய்த்தல், சுட்டுத் தள்ளுதல், ஈவிரக்கமற்றுக் கொன்றொழித்தல் என்று – கலவரங்களாகக் கட்டவிழ்க்கப்பட்ட பேரினவாத வெறி, இப்போது மிகவும் திட்டமிடப்பட்டு, துல்லியமாக, நுட்பமாக வனையப்பெற்று முன்னெடுக்கப்படுகின்றது. அதுதான் வேறுபாடு.**

**தொல் பொருள்களைப் பாதுகாக்கும் சட்டம், வன ஜீவராசிகள் பேணும் சட்டம், வனங்களை பாதுகாக்கும் சட்டம், மகாவலி அபிவிருத்தி, கடற்கரையோரப் பாதுகாப்பு என இன்னோரன்ன விதிகளின் கீழ் தமிழர் தாயகம் திட்டமிட்டு, வியூகம் வகுக்கப்பட்டு, சூறையாடப்படுகின்றது. நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு, கிழக்கில் – தமிழர் தேசத்தில் – பெருமளவு படைகள் குவிக்கப்பட்டு, அப்பிரதேசங்கள் படையமாக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் தாயக பூமி படையினரால் சுற்றிவளைத்து ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அந்த மக்களின் வாழ்வாதாரமான நிலங்களை சிங்களப்படைகள் சூறையாடி வைத்துக் கொண்டு தாங்களே விவசாயம் மற்றும் இன்னோரன்ன முயற்சிகளை வல்வந்தமாக முன்னெடுக்கின்றன.**

**தமிழர்களின் தாயகக் கடற் பிரதேசங்கள், வளங்கள் தென்னிலங்கை மீனவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு சூறையாடப்படுகின்றன.**

**யுத்த காலத்தை ஒட்டி படைகளால் முன்னெடுக்கப்பட்ட கோர நடவடிக்கைகளினால் படுகொலை செய்யப்பட்ட – காணாமலாக்கப்பட்ட – மக்களுக்கு நீதி கிட்டவில்லை. நியாயம் கிடைக்கவில்லை. உண்மைகள் கண்டறியப்படவில்லை. பொறுப்புக்கூறல் நிலைநிறுத்தப்படவில்லை. இழப்பீடுகள் வழங்கப்படவில்லை. மீளநிகழாமை உறுதிப்படுத்தப்படவில்லை. யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக விசாரணைகள் நடத்தப்படவில்லை.**

**இவற்றையெல்லாம் மூடி மறைப்பதன் மூலம் நீதி தன் கடமையைச் செய்யவிடாமல் திட்டமிட்டுத் தடுத்து வருகின்றது பௌத்த, சிங்கள இனவெறி அரசு.**

**தமிழ் அரசியல் கைதிகளின் அவலம் தொடர்கின்றது. அவர்களின் வாழ்க்கை சிறைக் கம்பிகளுக்குள் முடக்கப்பட்டு அங்கேயே முடிக்கப்படுகிறது.**

**இவையெல்லாம் இனவழிப்பு நடவடிக்கைகளே. 1983 ஜூலையில் முன்னெடுக்கப்பட்ட – மடை உடைத்த வெள்ளம் போல பாய்ந்த – இனக் கலவர வன்முறையின் மோசமான விளைவுகளைப் போன்ற நாசத்தை ஏற்படுத்தும் வேலைகள் புதிய வடிவங்களில், புதிய நுட்பங்கள், புதிய புதிய மார்க்கங்களில் பௌத்த, சிங்கள இனவாத அரசினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1983 கறுப்பு ஜூலை கொடூரத்தின் விளைவாக பெரும் விலையை கொடுக்க வேண்டி நேர்ந்த அனுபவம் கொழும்புக்கு உண்டு. இப்போது வேறு வடிவில் தொடரும் இன வன்முறைகளுக்கும் அது விலை கொடுக்க வேண்டியிருக்கும் – விரைவில்.**

# சிறுமி ஹிஷாலினியின் உயிரிழப்புக்கு நீதிகோரி இராகலையில் போராட்டம்





நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாக பணியாற்றிய டயகம மேற்கு தோட்ட சிறுமியின் உயிரிழப்புக்கு நீதி கோரி, இராகலை நகரில் உள்ள இராகலை முருகன் கோவிலுக்கு அருகில், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

'சிறுவர் உரிமை மீறலுக்கு எதிராக ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில், ஒன்றிணைந்த பொது அமைப்புகளுடன் சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு, இந்தப்போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியது.

இதன்போது டயகம சிறுமி ஹிஷாலியின் மரணத்துக்கு நீதி வேண்டும், சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவதை தடை செய்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும், உள் நாட்டில் குடும்ப வறுமை காரணமாக வீட்டுப் பணியாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளவர்களை பாதுகாக்க வேண்டும், மலையக பெருந்தோட்ட சிறுவர்கள் எதிர்காலத்தில் கல்வி, தொழில்வாய்ப்பு, பொருளாதாரம் ஆகியவற்றில் உரிமையுடையவர்களாக வாழத் தனி உரிமை சட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் ஆகிய நான்கு முக்கிய கோரிக்கைகள் உள்ளிட்ட மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன், அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கோஷங்களும் எழுப்பப்பட்டன.

இந்தப் போராட்டத்தில், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் தேசிய அமைப்பாளர் வெத்திலிங்கம் மகேந்திரன், புதிய கம்யூனிஸ்ட் தொழிலாளர் சங்க தலைவர் சட்டத்தரணி எஸ்.மோகனராஜன், சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு செயலாளர் எஸ்.மோகன்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# 4 ஆவது அலை ஏற்படுமாயின் நாடு பாரிய அழிவை சந்திக்கும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

நாட்டில் கொவிட் பரவல் நான்காவது அலை ஏற்படுமாயின், அதற்கான பிரதான காரணி டெல்டா வைரஸாகவே காணப்படும்.

எனவே இலங்கையில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின் அது கட்டுப்படுத்த முடியாததாகிவிடும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் டெல்டா பரவல் பாரிய அழிவை ஏற்படுத்தியுள்ளது. இங்கும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின் அது கட்டுப்படுத்த முடியாது.

எனவே சமூகத்திலுள்ள டெல்டா தொற்றாளர்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும் என்பதோடு, நான்காவது அலை உருவாகுவதையும் தடுக்க வேண்டும். அதற்கு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதோடு சுகாதார விதிமுறைகளையும் மிகவும் இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும்.

மேலும், தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் அது மாத்திரமே வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வாக அமையாது.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதும் அத்தியாவசியமானதாகும். காரணம் எந்த வகைத் திரிவுகளாகக் காணப்பட்டாலும் அவை பரவும் வழிமுறை ஒரே மாதிரியானவையாகவே காணப்படும்.

நாட்டில் 61 டெல்டா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள அதேவேளை, அது பரவும் வேகமும் மிகவும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொவிட் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை விட டெல்டா தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு பாதிப்புக்களானது 1000 மடங்கு அதிகமாகக் காணப்படுவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். - வவுனியா ரயில் போக்குவரத்து 72 நாள்களின் பின் இன்று மீள ஆரம்பம்



வடக்குரயில்பாதையின் ஊடாக காங்கேசன்துறை முதல் வவுனியா வரையான நாளாந்த ரயில் சேவைகள் இன்று (திங்கட்கிழமை) முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, குறித்த ரயில் காலை 5.15 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து வவுனியா நோக்கியும் பிற்பகல் 5 மணிக்கு வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை நோக்கியும் பயணிக்கவுள்ளது.

பயணத் தடைக்காரணமாக நிறுத்தப்பட்டிருந்த குறித்த சேவை 72 நாள்களின் பின்னர் இன்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கம்பனிகளின் கெடுபிடிகளுக்கு எதிராக மலையகத்தில் பாரிய போராட்டம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற கம்பனிகளின் அடக்கு முறைகளுக்கும் அடாவடித்தனங்களுக்கும் எதிராக கவனவீர்ப்பு போராட்டமொன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் மஸ்கெலியா எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது எனக்கூறப்பட்டாலும் தொழிலாளர்களின் தொழில் சுமை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கான பெயருக்கு 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டியுள்ளது. அதேபோல பல தோட்டங்களில் வேலை நாள்கள் குறைக்கப்பட்டுள்ளன.

மேலும் நலன்புரிச் சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான அடக்குமுறை செயற்பாடுகளை கம்பனிகள் கைவிட வேண்டும். - என வலியுறுத்தியுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கர்நாடக முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார் எடியூரப்பா



முதலமைச்சராக பதவியேற்று 2 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் தனது பதவியை கர்நாடக முதல்வர் எடியூரப்பா ராஜினாமா செய்துள்ளார். ஜூலை 16 அன்று டெல்லி சென்றிருந்த எடியூரப்பா பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரை சந்தித்துப் பேசியிருந்தார்.

கர்நாடகத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி எடியூரப்பா நான்காவது முறையாக முதலமைச்சராக பதவி ஏற்றார். 75 வயதை தாண்டிய தலைவர்களுக்கு பா.ஜ.க.வில் கட்டாய ஓய்வு அளிக்கப்படுகிறது. ஆனால், அதில் இருந்து 76 வயதான எடியூரப்பாவுக்கு விலக்கு அளித்து அவருக்கு முதலமைச்சர் பதவியை பா.ஜ.க. மேலிடம் வழங்கியது.

அப்போதே 2 ஆண்டுகள் முடிந்ததும் முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்த நிபந்தனையை எடியூரப்பா ஏற்றுக்கொண்டார். அதன்படி எடியூரப்பா முதலமைச்சர் பதவி ஏற்று இன்றுடன் 2 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் முதல்வர் பதவியை அவர் ராஜினாமா செய்தார்.

தனது ராஜினாமா கடிதத்தை மாநில ஆளுநரிடம் அளித்த பின்பு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த எடியூரப்பா, ராஜினாமா செய்யுமாறு எனக்கு யாரும் நெருக்கடி தரவில்லை. ஏற்கனவே உறுதி அளித்தபடி 2 ஆண்டுகள் பதவியை நிறைவு செய்து விட்டு ராஜினாமா செய்துள்ளேன். அடுத்த சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. மீண்டும் ஆட்சி அமைக்க பாடுபடுவேன். எனக்கு பிறகு முதல்வராக பதவியேற்பவர் யார் என்ற விவரம் எனக்குத் தரப்படவில்லை என்று தெரிவித்தார்.

# பெகாசஸ் உளவு விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டும்



அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களின் கைத்தொலைபேசிகள் உளவு பார்க்கப்பட்டனவா? என்ற கேள்விக்கு நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டும் என காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்த ப.சிதம்பரம், பெகாசஸ் உளவு விவகாரத்தில் நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு அரசு உத்தரவிட வேண்டும் அல்லது தற்போது பதவியில் உள்ள நீதிபதி கண்காணிப்பில் விசாரணை நடத்த உச்ச நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சட்டவிரோதமாக உளவு பார்த்ததன் மூலம் 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலிலும் பா.ஜ.க. ஆதாயம் அடைந்திருக்கவும் வாய்ப்புள்ளது எனவும் ப.சிதம்பரம் தெரிவித்தார். பெகாசஸ் விவகாரத்தை பா.ஜ.க. எம்.பிக்கள் பெரும்பான்மையாக உள்ள நாடாளுமன்ற நிலைக்குழு விசாரிப்பதைவிட நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரிப்பதே சரியாக இருக்கும் என்றும் சிதம்பரம் தெரிவித்திருக்கிறார்.

# லொட்டரியை மீள ஆரம்பிக்கும் திட்டமில்லை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவிப்பு




லொட்டரி சீட்டு விற்பனையை மீண்டும் தமிழகத்தில் அறிமுகம் செய்து மாநில நிதி ஆதாரத்தை பெருக்கும் சிந்தனை தி.மு.க. அரசுக்கு இல்லை என நிதியமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

லொட்டரி சீட்டு விற்பனையை தமிழக அரசு மீண்டும் கொண்டு வரப்போவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன எனவும், அதனை தி.மு.க. அரசு கைவிட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அறிக்கை வெளியிட்டிருந்தார். அவரது கருத்துக்கு பதில் அளிக்கும் வகையிலும், கண்டனம் தெரிவித்தும் நிதியமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், லொட்டரி சீட்டை மீண்டும் தி.மு.க. அரசு கொண்டுவர முயற்சிக்க வேண்டாம் என ஒரு பொய்யான அறிக்கையை எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டிருக்கின்றார் என விமர்சித்துள்ளார். தமிழ்நாடு அரசின் ஆலோசனைகளிலோ, ஆய்வுக் கூட்டங்களிலோ ஒருமுறை கூட லொட்டரி பற்றிய பேச்சே எழவில்லை எனக் கூறியுள்ள அமைச்சர், நிதிப் பேரழிவில் மாநிலத்தை அ.தி.மு.க. விட்டுச்சென்றாலும், மாநில நிதி ஆதாரத்தைப் பெருக்கும் வழிகளில் லொட்டரி பற்றிய சிந்தனையே தி.மு.க. அரசுக்கு இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு என்று ஒரு கண்ணியம் இருக்கிறது என்பதை நினைவில் கொண்டு, ஆக்கபூர்வமான கருத்துகளை வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கேட்டுக்கொண்டுள்ளார். கற்பனைகளை அடிப்படையாக வைத்து தி.மு.க. அரசை குறை கூறுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கார்கில் போர் வெற்றித்தினக் கொண்டாட்டம் குடியரசுத் தலைவர் பயணம் திடீர் ரத்து



1999 ஆம் ஆண்டு, கார்கிலில் ஊடுருவிய பாகிஸ்தான் படையினரோடு இந்தியப் படையினர் மோதி வெற்றிபெற்றதன் 22 ஆவது ஆண்டு வெற்றித் தினம் இன்று இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி லடாக்கின் த்ராஸ் பகுதியில் இன்று நடைபெறும் கார்கில் வெற்றி தின கொண்டாட்டத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கலந்துகொள்ளும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆயினும், லடாக் த்ராஸ் பகுதியில் நிலவும் மோசமான வானிலை காரணமாக, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கார்கில் போர் நினைவுச் சின்னத்தில் முப்படைகளின் தளபதி பிபின் ராவத் மலர் அஞ்சலி செலுத்தினார். இந்த நிகழ்வில் லடாக் துணைநிலை ஆளுநர் ஆர்.கே.மாத்தூர் மற்றும் லடாக் எம்.பி. ஜம்யாங் செரிங் நம்கியால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற வளாகத்தில் டிராக்டர் செலுத்தி ராகுல் காந்தி விவசாயிகளோடு போராட்டம்

*மூன்று வேளாண் சட்டங்களை ரத்துச் செய்யக்கோரி இந்திய நாடாளுமன்றம் அருகே உள்ள ஜந்தர் மந்தரில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, நாடாளுமன்ற வளாகத்திற்கு அருகே டிராக்டர் வாகனத்தை செலுத்தி வந்து விவசாயிகள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.*

*விவசாயிகளுக்கு எதிரான சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என ராகுல் அப்போது வலியுறுத்தினார். ராகுல் காந்தியுடன் டிராக்டரில் பயணித்தவர்கள் வேளாண் சட்டங்களுக்கு எதிரான பதாகைகளை கைகளில் ஏந்தியிருந்தனர்.*

*கடந்தவாரம் ஆரம்பமான இந்திய நாடாளுமன்றின் மழைக்காலக் கூட்டத்தொடரில் காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சியினரின் தொடர்ச்சியான எதிர்ப்புகளால் திட்டமிட்டபடி அமர்வுகளை நடத்த முடியாமல் பா.ஜ.க. தலைமையிலான அரசு தடுமாறி வருவது குறிப்பிடத்தக்கது.*



# பிரான்ஸில் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் வன்முறை



கொரோனா வைரஸால் மோசமாக பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் பிரான்சும் ஒன்று. அங்கு ஏற்கனவே கொரோனா வைரஸின் 3 அலைகள் கடும் பாதிப்புகளை ஏற்படுத்திய சூழலில் 4 ஆவது அலை எந்நேரத்திலும் உருவாகலாம் என சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொள்ள மக்களை பல்வேறு வழிகளில் அரசு கட்டாயப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், அரசின் கட்டுப்பாடுகள் தங்களின் சுதந்திரத்தைப் பறிப்பதாகக் கூறி அந்நாட்டு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் நாடு முழுவதும் சுமார் 1 லட்சத்து 61 ஆயிரம் பேர் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தினர்.

தலைநகர் பாரீஸில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பேரணியாகச் சென்றனர். அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த 2 பொலிஸ் அதிகாரிகளை போராட்டக்காரர்கள் தாக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து அங்கு 100 - இற்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது.

போராட்டக்காரர்கள் கையில் கிடைத்த பொருள்களை பொலிசார் மீது வீசி எறிந்தனர். அதேபோல் போலீசார் போராட்டக்காரர்களை விரட்டியடிக்க தண்ணீரை பீய்ச்சி அடித்ததுடன் கண்ணீர் புகை குண்டுகளையும் வீசி எறிந்தனர். தடியடியும் நடத்தினர். இதனால் பாரீஸ் நகரமே கலவர பூமியாக காட்சியளித்தது.

# சீனாவில் வரலாறு காணாத மழை பலி எண்ணிக்கை 63 ஆக உயர்வு



சீனாவில் ஆண்டுதோறும் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் ஏற்படும் பெரு வெள்ளத்திற்கு பலர் உயிரிழக்கின்றனர். பொருள்களும் சேதமடைகின்றன.

இதற்கிடையே, ஹெனான் மாகாணத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பல பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

அவர்களில் 12 பேர் சுரங்க ரயில் பயணிகளும் அடங்குவர். வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து மேலும் 18 உடல்கள் மீட்கப்பட்டன. இந்தப் பேரிடரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 33 ஆக உயாந்துள்ளது என முதற்கட்ட தகவல் தெரிவித்தது. மழை மற்றும் வெள்ளத்தால் ரூ. 75,000 கோடி அளவுக்கு பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மழையை முன்னிட்டு ஹெனான் பகுதியில் வசிக்கும் 3.76 லட்சம் பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

மொத்தம் 12.4 லட்சம் பேர் மழை, வெள்ளத்திற்கு பாதிப்படைந்துள்ளனர். சுரங்க பாதைகள், தெருக்கள், ஹாட்டல்கள் உள்ளிட்ட பல கட்டடங்கள் வெள்ள நீரால் சூழ்ந்துள்ளன. இதனால் பொது போக்குவரத்து பெரிதும் பாதிப்பிற்குள்ளானது.

தொடர்ந்து கனமழை இருக்கக் கூடும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து தேடுதல் மற்றும் மீட்பு பணி நடந்து வருகிறது.

இந்நிலையில், மழை வெள்ளத்தில் சிக்கி நேற்று வரை 63 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேரைக் காணவில்லை. 8.52 லட்சம் பேர் வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். 876.6 ஆயிரம் ஹெக்டேயர் நிலங்களில் பயிரிடப்பட்டு இருந்த பயிர்கள் பாதிக்கப்பட்டு உள்ளன. 24,474வீடுகள்இடிந்துவிழுந்துள்ளன.

இதுதொடர்பாக, ஹெனான் மாகாண நீர்வளத்துறை அதிகாரிகள் கூறுகையில், மாகாணத்தின் சில பகுதிகளில் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பெய்யும் மழை அளவானது பதிவாகி உள்ளது என தெரிவித்தனர்.

# இந்தோனேஷியாவையும் உலுக்கும் கொரோனா

## ஒரே நாளில் 1266 பேர் உயிரிழப்பு

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேசியாவில் கடந்த சில நாள்களாக கொரோனா வைரஸ் பாதிப்பு ஜெட் வேகத்தில் அதிகரித்து வருகிறது. அங்கு தினசரி கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

உலக அளவில் கொரோனா பாதிப்பு அடைந்தவர்கள் பட்டியலில் இந்தோனேசியா 14 ஆவது இடத்தில் உள்ளது.

இந்நிலையில், இந்தோனேஷியாவில் நேற்று ஒரே நாளில் 38,679 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன்மூலம் அங்கு கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 31.66 லட்சத்தைக் கடந்துள்ளது. அதேபோல் கடந்த 24 மணி நேரத்தில் அங்கு 1,266 பேர் கொரோனாவால் உயிரிழந்தமையை தொடர்ந்து, மொத்த உயிரிழப்பு 83 ஆயிரத்தைத் தாண்டியது.

# இந்தோனேஷியாவில் கொரோனாவால் குழந்தைகள் உயிரிழப்பு அதிகரிப்பு

இந்தோனேஷியாவில் கொரோனாவால் குழந்தைகளின் உயிரிழப்பு ஆபத்தான அளவுக்கு அதிகரித்துள்ளது.

இந்தோனேஷியாவில் கடந்த சில வாரங்களில் கொரோனாத் தொற்றால் நூற்றுக்கணக்கான குழந்தைகள் உயிரிழந்தனர். இவர்களில் பலர் ஐந்து வயதுக்கு உட்பட்டவர்கள்.

இந்த இறப்பு வீதம் மற்ற நாடுகளை விட அதிகமாகும். நாடு முழுவதும் டெல்டா வகை கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதே குழந்தைகள் உயிரிழப்புக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கடந்தவெள்ளிக்கிழமைஒரேநாளில் புதிதாக ஐம்பதாயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்து 566 பேர் உயிரிழந்தனர் எனவும், தொற்றுக்கு ஆளானோரில் 12.5 சதவீதத்தினர் குழந்தைகள் என்றும் அரசு தெரிவித் துள்ளது.

ஜூலை 12 ஆம் நாளுடன் முடிந்த வாரத்தில் மட்டும் 150 இற் கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளன எனவும், இவர்களில் பாதிப்பேர் ஐந்து வய துக்குட்பட்டோர் என்றும் தெரிய வந்துள்ளது.






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சாய்ந்தமருதில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இரண்டாவது நாளாகவும் தொடர்கின்றன

சாய்ந்தமருதில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இரண்டாவது நாளாகவும் சுகாதார வைத்திய அதிகாரி அல்- அமீன் றிசாத் தலைமையில் வெற்றிகரமாக இடம்பெற்றன. சனிக்கிழமை 1,162 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி வரையில் 850 பேருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி அல் - அமீன் றிசாத் தெரிவித்தார்.


காரைதீவு பிரதேச செயலக பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், உதவி பிரதேச செயலாளர் எஸ் . பாத்தீபன், உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ,பட்டதாரி பயிலுனர்கள், பல்நோக்கு அபிவிருத்தி பயிற்சி உதவியாளர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொண்டதோடு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்திலும் இணைந்து கொண்டனர்.


மேலும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரிவில் சனிக்கிழமை மொத்தமாக 1,930 பேர் தடுப்பூசிகள் பெற்றுக் கொண்டுள்ளனர். நேற்று மாலை 4 மணிவரை 1,800 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா வஸீர் தெரிவித்தார். மேலும் கொரோனாத் தடுப்பூசி கிடைக்காமையினால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் சில இடங்களில் அதிகமானோர் ஏமாற்றத்துடன் வீட்டுக்கு திரும்பிச்சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

கல்முனை பிராந்தியத்திற்கு சுகாதார அமைச்சினால் 50 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்த நிலையில் முதல் நாளில் மட்டுமே 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில்

# வெலிக்கடை படுகொலையின் 38ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு





1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தமிழ் இன அழிப்பைத் தொடர்ந்து - ஜூலை 25, 27ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நடைபெற்ற படுகொலைகளில் ஆயுதப் போராட்ட ஆரம்ப கர்த்தாக்களான தங்க துரை, தளபதி குட்டிமணி அடங்கலாக 53 அரசியல் கைதிகள் படுகொலை செய்ததன் 38ஆவது நினைவு தினம் நேற்றாகும்.

வெலிக்கடை படுகொலையின் 38ஆவது நினைவு தினம் நேற்று மாலை திருகோணமலை கடற்கரையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவரங்கில் சுடரேற்றி அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன் (ஜனா) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் வினோநோதராதலிங்கம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உப தலைவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி தவிசளருமான இந்திரகுமார் பிரசன்னா, கட்சியின் இளைஞரணி உப தலைவர் இரத்தினஐயா வேணுராஜ் மற்றும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

பொலிஸாரின் தடையை மீறி இந்நிகழ்வு நடாத்தப்பட்டதோடு அப்பகுதியில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு பிள்ளைகளின் தந்தை வெல்லாவெளியில் தற்கொலை

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 40ஆம் கிராமம்,வம்மியடியூற்று பிரதேசத்தைச் சேர்ந்த (55) வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான வடிவேல் - நேசதுரை என்பவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது - மரணமானவர் நீண்ட நாள்களாக தான் தற்கொலை செய்ய போகிறேன் என கூறிவந்தார் எனவும் சம்பவ தினத்தன்று, அவரின் மனைவி இல்லாதபோது தனது வீட்டு அறையினுள் தூக்கிட்டு தற்கொலைக்கு முயற்சி செய்த போது சம்பவத்தை கண்ட அவரின் மனைவி அயலவரின் உதவியுடன் தூக்கில் இருந்து மீட்டெடுத்து களுவாஞ்சிகுடி ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதிவான் வி.தியாகேஸ்வரன் அவர்களின் உத்தரவுக்கு அமைய வெல்லாவெளி பிரதேச பிரிவுக்குட்பட்ட திடீர்மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தினை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு கட்டளையிட்டார். மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 275 மில்லிகிராம் போதைப்பொருளுடன் இராணுவத்தினரால் நால்வர் கைதாகினர்

நிந்தவூரில் போதைப்பொருள் வியாபாரிகளை கைது செய்வதற்காக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பிரபலமான போதைப்பொருள் வியாபாரி ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணி யளவில் நிந்தவூர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி தலைமையிலான இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சுமார் 275 மில்லி கிராம் போதைப்பொருளுடன் நால்வர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர் என சம்மாந் துறை பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரே இரவில் நிந்தவூர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி தலைமையிலான இராணுவத்தினரால் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட இரண்டு சுற்றிவளைப்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து 1,135 மில்லிகிராம் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேசத்தில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை 26

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விளாவெட்டுவான், நாவற்காடு பிரதேசத்தில் உள்ள உணவுக்கடை ஒன்றிலிருந்து இளம் குடும்பஸ்தரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இரு பிள்ளைகளின் தந்தையான பரமானந்தம் - கிரிதரன் வயது (35) என்பவர் தனது உணவகத்தில் வழமை போன்று உணவுப்பொருள்களை தனது உதவியாளருடன் விற்பனை செய்து விட்டு இரவுச் சாப்பாடு உண்டு விட்டு கடையின் அறையினுள் இருவருமாக நித்திரை செய்தனர் எனவும் பின்னர் அவரின் உதவியாளர் அதிகாலைவேளையில் அவரை தட்டி எழுப்பியபோது இறந்த நிலையில் காணப்பட்டார் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதிவான் வி.தியாகேஸ்வரன் அவர்களின் உத்தரவுக்கு அமைய வெல்லாவெளி பிரதேச பிரிவுக்குட்பட்ட திடீர்மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தினை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு கட்டளையிட்டார். மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு பிரதான வீதியில் விபத்து பெண்ணொருவர் சம்பவ இடத்தில் பலி



திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் சேருநுவர பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் திருகோணமலை பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த குறித்த பெண்ணின் கணவர் திருகோணமலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவிலும், 7 வயதான குழந்தை மூதூர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வெருகல் முருகன் கோவிலுக்குச் சென்று திரும்பி வந்த முச்சக்கர வண்டி யின் மீது காரொன்று வேகக் கட்டுப்பாட்டை மீறி மோதியமையினாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுர சுற்று வளைவில் விபத்து





மட்டக்களப்பு , ஜூலை 26

மட்டக்களப்பு நகரில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாகனவிபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு நகர் மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகாமையில் நேற்று நண்பகல் இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு வாகன போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர் .

குறித்த வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இடம்பெற்றுள்ள விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு வாகனப் போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாவது ரி–20 போட்டியில் இந்திய அணி அபார வெற்றி!




இலங்கை அணிக்கெதிரான முதலாவது ரி-20 போட்டியில் இந்திய அணி 38 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில், 1-0 என்ற கணக்கில் இந்தியா அணி முன்னிலை பெற்றுள்ளது.

கொழும்பு - ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சூர்ய குமார் யாதவ் 50 ஓட்டங்களையும், ஷிகர் தவான் 46 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் துஷ்மந்த சமீர மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சமிக்க கருணாரத்ன ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இந்தப்போட்டி ஆரம்பித்து, துஷ்மந்த சமீர வீசிய முதல் பந்திலேயே பிரத்வீ ஷா ஆட்டமிழந்து வெளியேறினார். இதன்மூலம் ரி-20 கிரிக்கெட்டில் முதல் பந்திலேயே தனது விக்கெட் ஒன்றை முதல்முதலாக இந்திய அணி இழந்திருந்தது.

165 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி, 18.3 ஓவர்கள் நிறைவில் 126 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழக்க, இந்திய அணி 38 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. சரித் அசலங்க 44 ஓட்டங்களையும் அவிஷ்க பெனார்டோ 26 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் புவனேஸ்வர் குமார் 4 விக்கெட்டுகளையும் தீபக் சஹார் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் புவனேஸ்வர் குமார் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## டோக்கியோ ஒலிம்பிக் பதக்கப் பட்டியலில் சீனாவை முந்தியது அமெரிக்கா




டோக்கியோ ஒலிம்பிக் பதக்கப் பட்டியலில் ஆரம்பித்த நாள் முதல் சீனா முதல் இடத்தில் இருந்தது. இன்று சீனாவை பின்னுக்குத்தள்ளி அமெரிக்கா முதல் இடம் பெற்றுள்ளது.

கொரோனா காலகட்டத்தில் நடைபெறும் முக்கிய விளையாட்டு நிகழ்வான ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேரடிப் பார்வையாளர்களாக ரசிகர்கள் இன்றி போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இன்று காலைவரையான நிலைவரப்படி அமெரிக்கா தங்கம் 6, வெள்ளி 3, வெண்கலம் 4 என மொத்தம் 13 பதக்கங்களுடன் முதல் இடத்திலும், சீனா தங்கம் 6, வெள்ளி 2, வெண்கலம் 6 என மொத்தம் 14 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், ஜப்பான் 6 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என 8 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் இருந்தன.

## ஒலிம்பிக் பளு தூக்குதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற மீரா பாய் சானுவுக்கு தங்கம்?



டோக்கியோ ஒலிம்பிக்கில் மகளிருக்கான 49 கிலோ எடைப்பிரிவு பளுதூக்குதல் போட்டியில் இந்தியாவிலிருந்து பங்கேற்ற ஒரே வீராங்கனையான மீராபாய் சானு வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியிருந்தார். ஒலிம்பிக்கில் பளுதூக்குதல் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை வென்ற முதல் இந்திய வீராங்கனை என்கிற பெருமையையும் மீராபாய் சானு பெற்றுள்ளார். இந்த நிலையில் வெள்ளிப் பதக்கம் வென்ற மீரா பாய் சானுவுக்கு தங்கப்பதக்கம் கிடைக்க வாய்ப்பிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மகளிர் 49 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற சீன வீராங்கனைக்கு ஊக்க மருந்துச் சோதனை நடத்தப்படுகிறது. ஒருவேளை அவர் ஊக்கமருந்து உட்கொண்டது உறுதி செய்யப்பட்டால், இந்திய வீராங்கனை மீராபாய் சானுவுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

## ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெறவுள்ளன போட்டிகள்




ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து இலங்கைக்கு மாற்றப்பட்டுள்ளது.

செப்டெம்பர் முதலாம் திகதி ஹம்பாந்தோட்டையில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இந்தப் போட்டித் தொடர் ஆரம்பமாகவுள்ளதாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இந்தத் தொடர் முதலில் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்த திட்டமிடப்பட்டபோதும் ஒரு சில காரணங்களினால் அங்கு நடத்த முடியாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் ஐ.பி.எல். 2021 இன் எஞ்சிய போட்டிகள் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள அதேவேளை, அங்கும் ஓமானிலும் உலகக்கிண்ண ரி20 போட்டித் தொடர் நடைபெறவுள்ளமையுமே ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் தொடர் இலங்கைக்கு மாற்றப்படக் காரணம் என்று தெரியவந்துள்ளது.

## 13 வயதில் தங்கப் பதக்கம் வென்ற ஜப்பான் சிறுமி



டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான ஸ்கேட்டிங் போட்டியில் 13 வயதான ஜப்பானைச் சேர்ந்த சிறுமி நிஷியா மோமிஜி தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். அதே போல் ரஷ்யாவைச் சேர்ந்த 13 வயதுடைய ராய்சா லீல் வெள்ளிப் பதக்கத்தை வென்றார். ஜப்பானின் பனா நாகயமா வெண்கலப் பதக்கம் பெற்றார்.

ஸ்கேட்டிங் இறுதிப் போட்டிக்கு மொத்தம் 7 பேர் தேர்வு பெற்று இருந்த நிலையில், சிறுமிகள் இருவர் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலவசக் கல்வி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் வலியுறுத்தி பூண்டுலோயாவில் மாபெரும் போராட்டம்

சேர்.ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழகச் சட்டமூலத்தை மீளப் பெறுமாறும் இலவசக் கல்வி உரிமையை பாதுகாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி பூண்டுலோயாவில் போராட்டமொன்றுநேற்று(ஞாயிற்றுக்கிழமை)முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் அந்தக் கட்சியின் அரசியல் செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடாது என வலியுறுத்தினர்.

மேலும் நாட்டில் நிலவும் உரத்தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் அனைத்து மக்களும் எதிர்நோக்கியுள்ள அத்தியாவசியப் பொருள்கள் உட்பட ஏனைய பொருள்களின் விலையை உடனே குறைக்குமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தனர்.

## இளைஞர் குழுக்களுக்கு இடையில் புதுக்குடியிருப்புப் பகுதியில் மோதல்

### இருவர் காயம்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சுதந்திரபுரம் சந்தியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்திற்குப் பின்பாக இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற முரண்பாடு கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது கூரிய ஆயுதங்கள் கொண்டு தாக்கப்பட்டதில் வீடு ஒன்றின் சில பொருள்கள் சேதமடைந்துள்ளமையுடன், இருவர் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சிறிலங்கா ஏயார்லைன்ஸுக்கு பாரியளவில் வருமான இழப்பு

சிறிலங்கா ஏயார்லைன்ஸ் 2020 மற்றும் 2021 நிதியாண்டுகளில் 70 வீதம் வருமான இழப்பை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா ஏயார்லைன்ஸின் தலைவர் அசோக் பத்திரகே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

உலகளவிய ரீதியில் கொவிட் பரவல் காரணமாக வானூர்தி துறையில் 60 முதல் 80 வீதமான இழப்புக்கள் ஏற்பட்டன என்பதை அந்த அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எல்லைக் கட்டுப்பாடுகள் மற்றும் வானூர்தி நிலையங்கள் மூடப்பட்டிருந்த போதும் சிறிலங்கா ஏயார்லைன்ஸ் தொடர்ந்தும் வெளிநாடுகளில் நிர்கதியாகியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2020 ஏப்ரல் மாதம் முதல் 2021 மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் 229 வானூர்திகளில் 74 ஆயிரத்து 32 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

எனினும் 2021ஏப்ரல் முதல் இதுவரையான காலப்பகுதியில் அட்டவணைப்படுத்தப்பட்ட சிறிலங்கன் ஏயார்லைன்ஸ் வானூர்தியில் 35 ஆயிரத்து 612 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என அசோக் பத்திரகே குறிப்பிட்டுள்ளார்.

## அடிபணியாத ஊடக அறத்தை இங்கு அறிமுகப்படுத்தியவர்

### இராஜமகேந்திரனுக்கான இரங்கலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

கப்பிடல் மகாராஜா நிறுவனத்தின் தலைவர் ஆர்.இராஜமகேந்திரன், அடிபணியாத ஊடக அறத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவராவார்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., அக்கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கப்பிடல் மகாராஜா நிறுவனத்தின் தலைவர் ஆர்.இராஜமகேந்திரனின் இழப்புச்செய்தி எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. தனது 16 வயதிலே கப்பிடல் மகாராஜா நிறுவனத்தில் தனது தந்தையின் வழிகாட்டலில் வேலையை ஆரம்பித்து, 21 வயதில் அவரது தந்தையின் இழப்பின் பின்னர், சகோதரர்களுடன் இணைந்து செயற்படுத்தி வர்த்தக உலகத்தில் ஒரு ஜாம்பவானாக அவர் வலம் வந்திருந்தார். இலங்கையின் அனைத்து வர்த்தகத் துறைகளிலும் தாக்கத்தைச் செலுத்தக் கூடிய அளவுக்கு கப்பிடல் மகாராஜா கட்டமைப்பை அவர் பரவலாக்கியிருந்தார்.

இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் கூட, போட்டிபோடக் கூடிய அளவுக்கு மிகவும் முன்னேற்றகரமான மிகப்பெரிய கட்டமைப்பாக தனது நிறுவனத்தை நிலைநிறுத்தியிருந்தார்.

ஊடகத்துறையிலும் கால்பதித்த இராஜமகேந்திரன், அடிபணியாத ஊடக அறத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவராவார்.

இந்த நாட்டினுடைய ஊடகங்கள், ஒன்றில் அரச தரப்பாலோ அல்லது வேறுதரப்புக்களாலோகையாளப்படும் அரசியல் பின்னணியில் இயங்கி வந்தபோது, நடுநிலை வகிக்கக் கூடிய வகையில், ஆட்சியில் இருக்கும் தரப்பையும் தட்டிக்கேட்கக்கூடிய, அடிபணியாத ஊடக அறத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியது இராஜமகேந்திரன் தலைமையில் இயங்கக்கூடிய சக்தி, சிரச, நியூஸ்பெஸ்ட் நிறுவனங்களுக்கு தனித்துவமான இடமுண்டு.

2010ஆம் ஆண்டிலிருந்து, தமிழ் தேசிய மக்கள் முன்னணியை ஆரம்பித்து, தமிழ் அரசியலிலே நடக்கின்ற மோசடிகள், கொள்கை ரீதியாக விளக்கக் கூடிய விடயங்கள், சர்வதேச மட்டத்தில் இருக்கக்கூடிய அரசியல் நிலைமைகள், அரசியல் தலைமைகளால் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் என்ற விடயங்களை, நாம் மக்கள் மத்தியிலே வெளிப்படுத்த முயன்ற அந்தக் காலகட்டங்களில், நாம் கூறும் உண்மைகள் மக்கள் மட்டத்தில் சென்று சேரவிடாமல் பல ஊடகங்கள் ஒன்றிணைந்து இருட்டடிப்பு செய்த போதும், எமது அரசியல் இயக்கத்துக்கென்று கணிசமான இடத்தை மகாராஜா நிறுவன ஊடகங்கள் வழங்கியிருந்தன என்பதை நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

ஏனைய பல ஊடகங்களும் எமது தரப்பு நியாயங்களை, செய்திகளை இருட்டடிப்பு செய்து எம்மைப் புறக்கணித்த நேரத்தில், மகாராஜா நிறுவன ஊடகங்கள் எமக்கு சந்தர்ப்பங்களை வழங்கியிருந்தது. அதற்கான காரணத்தைத் தேடி, சக்தி நிறுவனத்தில் பணியாற்றும் ஊடகத் துறை சார்ந்தவர்களிடம் வினவியபோது, 'அனைத்து தரப்பினரின் கருத்துக்களும் மக்களுக்குத் தெரிய வரவேண்டும். அதன் மூலம் கருத்து மோதல் ஒன்று ஏற்பட வேண்டும். அதன் மூலம், எதுசரி என்பதை மக்களே முடிவெடுக்க வேண்டும். அந்த மக்கள் முழுமையாக அறிந்து முடிவெடுக்கக் கூடிய தன்மையைக் கொண்ட ஊடக கலாசாரத்தையே எமது ஊடகம் செய்ய வேண்டும்' என்பது தங்கள் நிறுவனத் தலைவரின் கொள்கையாகக் கருதுவதால், உங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குகின்றோம் எனக் கூறியிருந்தனர்.

அந்த அளவுக்கு ஊடக அறத்தைப் பேணிவளப்பதில் இராஜமகேந்திரன் அளப்பெரிய பங்காற்றியுள்ளார். அப்போதைய சூழலில் ஏனைய பல ஊடகங்களும் எம்மைப் புறக்கணித்த போதும், அப்படியான ஒரு வாய்ப்பை சக்தி நிறுவனம் வழங்கியமையை நன்றியுடன் நினைவுகொள்கின்றோம். இராஜமகேந்திரனது தலைமையில் கப்பிடல் மகாராஜா நிறுவனத்தால் கடைப்பிடிக்கப்பட்ட இந்த ஊடக அறமானது ஒரு நாட்டினது ஜனாநாயகத் தன்மைக்கு அத்தியாவசியமானதாகும்.

அத்தகைய ஊடக அறத்தையே கேள்விக்கு உட்படுத்தக்கூடிய இன்றைய அரசியல் சூழலிலே, தனி மனித சிந்தனையில், நடமாடும் பல்கலைக்கழகமாக வலம்வந்த பேராழுமையை இழந்திருக்கின்றோம்.

இராஜமகேந்திரனின் இழப்பு, இந்த நாட்டின் ஜனநாயகத்தையே கேள்விக்குட்படுத்தப்போகின்றதோ? என்று சிந்திக்கக்கூடிய அளவுக்கு, பெரும் சோகத்துக்குள் எம்மைத் தள்ளியுள்ளது. அந்தளவுக்கு ஜனநாயகத்துக்கும், உண்மைக்கும், நேர்மைக்குமாக இராஜமகேந்திரனது பங்கு அமைந்திருந்தது.

அவரது இழப்பு அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் மட்டுமல்ல, ஊழல், மோசடியை எதிர்க்கின்ற, ஜனநாயகத்தைக் கட்டியெழுப்ப முயல்கின்ற அனைத்துத் தரப்பினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இராஜமகேந்திரனின் இழப்பின் துயரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பங்குகொள்வதுடன், அவரின் இழப்பால் துயருற்றிருக்கும், குடும்பத்தினர், சகோதரர்கள், உறவினர்கள், கப்பிடல் மகாராஜா நிறுவன குழுமத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

## இளஞ்செழியனின் மெய்காவலரின் 4 ஆம் ஆண்டு நினைவில் தானம்

### அவரே சென்று சிலாபத்தில் வழங்கினார் சிங்களவர் நெகிழும் மனிதாபிமான செயல்

நீதிபதி இளஞ்செழியனின் மனிதாபிமான செயற்பாடு தொடர்பாகத் தென்னிலங்கையில் மீண்டும் புகழாரம் சூட்டப்பட்டு வருகிறது.

மனிதாபிமானமற்ற சமூகத்தில் மீண்டும் மீண்டும் பிரகாசிக்கப்படும் தமிழரான நீதிபதி இளஞ்செழியனின் மனிதநேயம் மாறியுள்ளது என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற நீதிபதியாக செயற்பட்ட மாணிக்கவாசகம் இளஞ்செழியனின் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அவரது மெய்ப்பாதுகாவலரான சரத் ஹேமசந்திர என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்தார்.

சரத் ஹேமசந்திர உயிரிழந்து 4 வருடங்கள் நிறைவடைந்த நிலையில், கடந்த 22ஆம் திகதி நீதிபதி இளஞ்செழியன் தலைமையில் சிலாபத்தில் தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

உயிரிழந்த ஹேமசந்திரவின் கல்லறையில் விளக்கேற்றி, வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குடும்பத்தாருடன் தானம் வழங்கவும் நீதிபதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்த பின்னர் அவரது பிள்ளைகள் இரண்டையும் தனது பிள்ளைகளாகக் கருதும் நீதிபதி, அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவி செய்து வருகின்றார்.

ஹேமசந்திர உயிரிழந்த தினத்தன்று அவரது மனைவியின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கும் அளவிற்கு உணர்ச்சிவசப்பட்ட மனிதநேயமிக்க நீதிபதி இளஞ்செழியன் தற்போது திருகோணமலை நீதிபதியாகச் செயற்படுகின்றார் என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை பேஸ்புக்கில் நீதிபதியை வாழ்த்தி தென்னிலங்கை சேர்ந்த பலரும் பதிவுகளை பதிவிட்டுள்ளனர்.

அந்தப் பதிவில், உண்மையான மனிதன். கல்லறையில் வணங்கி விட்டு மாத்திரம் செல்லாமல் பொலிஸ் அதிகாரியின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கும் செயலுக்கு பாராட்டுகளை தெரிவிக்க வேண்டும். இலங்கையில் சிறந்த மனிதாபிமான உள்ள இந்த மனிதனுக்கு எங்கள் மரியாதை எப்போதும் உண்டு என பதிவிட்டுள்ளனர்.

## டெல்டாவின் தாக்கம் நாட்டில் அதிகரிப்பு

நாட்டில் டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 68 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலை தொடருமானால் இலங்கையில் 4 ஆவது கொரோனா அலை பரவக் கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

எனவே, நாட்டு மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, தற்போதைய மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்த பொறுப்புடன் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

மேலும் அவ்வாறு நடந்துகொண்டால் மாத்திரமே 4 ஆவது கொரோனா அலையை கட்டுப்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.07.2021இல் வெளியிடப்பெற்றது.